




செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் கூட்டுறவு சக்கரை ஆலையில் 2025–2026 ஆம் ஆண்டிற்கான அரவை பருவத்திற்கான கரும்பு அரவையினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். இதில், மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் செம்பருத்தி துர்கேஷ் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரிசர்வ் வங்கியை நடுநிலையான குறைதீர்ப்பாளராக மாற்றியதன் மூலம்

# ‘ஒரு நாடு - ஒரு குறை தீர்ப்பாளர் திட்டம்’ செயல்படுத்தப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் - இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி,டிச.23-

ரிசர்வ் வங்கியை நடுநிலையான குறைதீர்ப்பாளராக மாற்றியதன் மூலம் ‘ஒரு நாடு ஒரு குறைதீர்ப்பாளர்’ என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா என்றும், எத்தனை புகார்தாரர்கள் பலனடைந்துள்ளனர் என்றும் ஒன்றிய அரசிடம், நாடாளுமன்றத்தில் திமுக எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பியினார்.



நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடரில் கலந்துகொண்டுள்ள திமுக எம்.பி. இரா.கிரிராஜன், நிதி அமைச்சரிடன் ரிசர்வ் வங்கியை நடுநிலையான குறைதீர்ப்பாளராக (Neutral Ombudsman) மாற்றுவதன் மூலம் அரசாங்கம் ‘ஒரு நாடு ஒரு குறைதீர்ப்பாளர்’ என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறதா? புகார்தாரரின் நேரம், செலவுகள், மன உளைச்சல், துன்புறுத்தலுக்கு ரூ. 20 லட்சம் ரூபாய் வரை இழப்பீடு வழங்கவும், கூடுதலாக ரூ. 1 லட்சம் வரை இழப்பீடு வழங்கவும் குறைதீர்ப்பாளரால் முடியுமா?2022 முதல் ரிசர்வ் வங்கியை குறைதீர்ப்பாளராக தீர்மானித்தது முதல் தற்போது வரை பயனடைந்த புகார்தாரர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்ற கேள்விகளை எழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள ஒன்றிய நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்ரி, ரிசர்வ் வங்கி ஒருங்கிணைந்த குறைதீர்ப்புத் திட்டம் (RB-IOS) என்பது சேவைகள் தொடர்பான வாடிக்கையாளர் குறைகளை விரைவாகவும், செலவு குறைந்த முறையிலும் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும், இதில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய 24 ரிசர்வ் வங்கி குறைதீர்ப்பு அலுவலகங்கள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன என்றும் பதிலளித்துள்ளார்.

வாடிக்கையாளர் நேரடியாக புகார் அளிக்க முடியும் என்பதால், ரிசர்வ் வங்கி குறைதீர்ப்பு பொறிமுறையின் அதிகார வரம்பை நடுநிலையாக்குவதன் மூலம் ‘ஒரு நாடு ஒரு குறைதீர்ப்பு’ அணுகுமுறையைப் பின்பற்றப்படுவது உண்மைதான் என்றும் இணை அமைச்சர் பதில் அளித்துள்ளார்.

RB-IOS திட்டத்தின் பிரிவு 8(2) இன் படி, புகார்தாரரின் நேரம் இழப்பு, செலவுகள், இன்னைல்கள், மன வேதனை ஆகியவற்றிற்கு ரூ. 1 லட்சம் ரூபாய் வரை இழப்பீடு வழங்குவதற்கும், கூடுதலாக ரூ. 20 லட்சம் வரை இழப்பீடு வழங்கவும் குறைதீர்ப்பாளருக்கு அதிகாரம் இருப்பதாகவும் ஒன்றிய இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.

2022 முதல் ரிசர்வ் வங்கி குறைதீர்ப்பு ஆணையத்தின் செயல்பாட்டின் மூலம் பயனடைந்த புகார்தாரர்களின் எண்ணிக்கை குறித்த பட்டியலையும் இணை அமைச்சர் பதிலில் பதிவுசெய்துள்ளார்.

அதன்படி பரஸ்பர தீர்வு மற்றும் ஒப்பந்தத்தின் மூலம் 2022-23ஆம் நிதியாண்டில் 99,184 புகார்கள், 2023-24ஆம் நிதியாண்டில் 110073 புகார்கள், 2024-25ஆம் நிதியாண்டில் 93752 புகார்கள், 2025-26ஆம் நிதியாண்டில் நவம்பர் வரை 51530 புகார்கள் முடித்துவைக்கப்பட்டுள்ளன என்று திமுக எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

